பக்கங்கள் 12+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 19 வெள்ளிக்கிழமை 03.01.2025 | அதிர்வு 155

## ஐ.தே.க. செயலராக தலதா நியமனம்



ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளராக முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள நியமிக்கப்பட்டுள்ளார். 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அரசியல் தீர்வு தொடர்பில் அமெரிக்கத் தூதுவருடன் மனோ எம்.பி. கலந்தாய்வு

### அதிகாரப் பகிர்வு குறித்து முக்கிய கவனம்



இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரம், அதிகாரப் பகிர்வு விடயம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது என்று மனோ கணேசன் எம்பியின் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நகர்வு, அதிகாரப் பகிர்வு, மலையக பெருந்தோட்டக் காணி உரிமை, சட்டத்தின் ஆட்சி, பொருளாதார சவால்கள், சர்வதேச நாணய நிதியம் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது என்று மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## யோஷிதவிடம் சி.ஐ.டியினர் இரு மணிநேரம் விசாரணை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷ இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிகமான நேரம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

கதிர்காமம் பகுதியில் அமைந்துள்ள அரச காணி ஒன்றின் உரிமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முன்னிலையாகுமாறு யோஷித ராஜபக்ஷவுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி இன்று முற்பகல் 10 மணியளவில் அவர் குறித்த திணைக்களத்தில் முன்னிலையானார்.

இதனையடுத்து, அவர் இன்று நண்பகல் 12 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

### ஆளும் தரப்பு எம்.பியை அவமதித்த
## மொட்டுக் கட்சியின் உறுப்பினர் கைது!



தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டஹச்சியை சமூக ஊடகங்களில் அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், களுத்துறை – மில்லனிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் 02 ▶



# சிறைச்சாலையில் மரம் முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்த மற்றுமொரு கைதியும் மரணம்

மாத்தறை சிறைச்சாலையில் அரச மரத்தின் கிளையொன்று முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு கைதியும் உயிரிழந்தார்.

தெவிநுவர பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய நபரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விவாகரத்து வழக்கில் ஜீவனாம்சம் செலுத்தத் தவறியமைக்காக அவருக்குத் தலா 5 மாதங்கள் வீதம் 10 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு எதிராக மேலும் 6 வழக்குகள் தீர்க்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், அரச மரத்தின் கிளை முறிந்து வீழ்ந்ததால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் 12 கைதிகள் காயமடைந்து மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சம்பவ தினத்தன்று ஒருவர் மரணித்தார்.

தற்போது காயமடைந்தவர்களில் 7 பேர் மீண்டும் சிறைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதுடன், மேலும் மூன்று பேர் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேல் செல்லத் தடை

## நிந்தவூர் பொலிஸார் வேண்டுகோள்

**(பாறுக் ஷிஹான்)**

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக் காலமாக வீதி விபத்துகள் அதிகரித்து வருவதால் போக்குவரத்து நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றுமாறு நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே இதனை கருத்தில் கொண்டு கட்டாயம் இரண்டு பேருக்கு மேல் மோட்டார் சைக்கிளில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

சிறு பராயத்தினர் மற்றும் முறையான சாரதி அனுமதிப்பத்திரம் அற்றவர்கள் மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கு வழங்கும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தலைக் கவசம் இன்றியும் அதிக வேகத்துடனும் மோட்டார் சைக்கிளைச் செலுத்துவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்றும் நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# புத்தளத்தில் மாபெரும் இரத்ததான நிகழ்வு

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளை, புத்தளம் பெரிய பள்ளி, ரவறய புத்தளம் வியாபார சங்கம், நஹ்தா அமைப்பு, புத்தளம் நகர சபை, புத்தளம் தள வைத்திய சாலை மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்த தானம் நிகழ்வு நாளை (04) சனிக்கிழமை புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள கிளினிக் சென்டரில் காலை 08.30 மணி தொடக்கம் 2.30 வரை இடம்பெறவுள்ளது.

உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம் என்ற அடிப்படையில் அனைவரும் வருகை தந்து இரத்த தானம் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

உதிரம் கொடுப்பவர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னம் வழங்கப்படும் எனவும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளையின் உப செயலாளர் அஷ்ஷேக் இமாம் தீன் அஷ்ரபி தெரிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஐ.தே.க....**

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. பொதுச்செயலாளராகச் செயற்பட்ட பாலித ரங்கே பண்டார, அந்தப் பதவியில் இருந்து விலகியிருந்த நிலையில் புதிய பொதுச்செயலாளராக தலதா அத்துகோரள நியமிக்கப்பட்டுள்ளார்.

**மொட்டுக் கட்சியின்...**

ரவீந்திர ரம்முனி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை அகுருவாதோட்ட – படகொடவில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான ரவீந்திர ரம்முனி, அண்மையில் தனது பேஸ்புக் கணக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டஹச்சியை இழிவுபடுத்தும் வகையில் பதிவொன்றை இட்டிருந்தார்.

பின்னர் அந்தப் பதிவை அன்றே நீக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியில் ஒடுக்கமான பாலத்தால் நெருக்கடி!

## தீர்வை பெற்றுத் தருமாறு ஆதம்பாவா எம்.பியிடம் கோரிக்கை

(அபு அலா)

சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியில் ஒடுக்கமான பாலம் அமைந்துள்ளது. அதனை சீரமைக்க அரசியல்வாதிகள் கவனம் செலுத்துவதாக இல்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தோணாவுக்கு மேலாககுறுக்காகஅமைக்கப்பட்டுள்ளது இந்த ஒடுக்கமான பாலம்.



இந்தப் பாலத்தின் ஊடாகத்தான் ஆஸ்பத்திரி உப தபாலகம், கல்முனை றியாலுல் ஜன்னா வித்தியாலயம், தலைவர் அஷ்ரஃப் ஞாபகர்த்த பூங்கா, சாய்ந்தமருது ஆயுள்வேத மருந்த கம் , மஸ்ஜிதுல் சுஹதா பள்ளிவாசல், ஸ்ரீலங்கா யூத் சென்ரர் என்பன வற்றுக்குச் செல்ல வேண்டும்.

அபாயகரமான நிலையில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியான நிலையில் விரிவாக்கப்படல் வேண்டும் என்பது மக்களின் விருப்பமாகும்.

தினமும் பல நூற்றுக் கணக்கான வாகனங்கள் பயணிக்கும் ஒற்றையடிப் பாலமான சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதிப்பாலம் இன்னும் நம்மவர்களின் கண்களில் படவில்லை.

சுனாமிக்குப் பின்னர் சிதைவடைந்தும் அதன் தேவை பலவாறு உணரப்பட்டும் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் அது இன்னும் புனரமைக்கப்படவில்லை.

மில்லியன் கணக்கில் ஒதுக்கீடு செய்யப்படும் இன்றைய காலகட்டத்தில் இந்தப் பாலத்தை புனரமைப்பு செய்ய சாய்ந்தமருதில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளன ஏ. ஆதம்பாவா கவனம் செலுத்த வேண்டும் என்று அந்தப் பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.






# சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு சாய்ந்தமருதில்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

டயகோணியா மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயல் முன்னணி அனுசரணையில் சமூக அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது நண்பர்கள் வட்டம் சமூக சேவை அமைப்பின் ஒத்துழைப்புடன் விழுமியக் கல்வி ஊடாக, புத்தாக்க சமூக தீர்வுகளை வழங்கும் தொனிப் பொருளில், கடற்கரை சுத்தப்படுத்துதல் மற்றும் கழிவுகளைக் கொண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த வடிவமைப்புகளை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வைச் சாய்ந்தமருதில் நடத்தியது.

சுற்றுச்சூழல் செயற்பாடுகளில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் ஈடுபாட்டை அதிகரித்து, புத்தாக்க செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பை பெறும் நோக்கில், இளைஞர்கள் மத்தியில் நற் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





கல்முனை ஸாஹிரா கல்லூரி தேசியப் பாடசாலையின் சுற்றாடல் கழக அங்கத்தவர்கள், சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவத் தலைவர்கள், சாய்ந்தமருது நண்பர்கள் வட்ட சமூக சேவை அமைப்பின் அங்கத்தவர்கள் அத்துடன் சமூக ஆர்வலர்களின் பங்குபற்றலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா, சுங்கத் திணைக்கள பிரதி பணிப்பாளர் ஆதம் பாவா ஜலீல், விவசாய திணைக்கள விவசாய போதனாசிரியர் அப்ஸல் றிப்கி ஆகியோர் இதில் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது, சுற்றாடலில் காணப்படும் கழிவு பிளாஸ்டிக் போத்தல்களை கொண்டு சுற்றுச்சூழல் வடிவமைப்பு, இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் வகைகளும் அவற்றால் ஏற்படும் சூழல் மாசடைவுகளும், வீட்டுக் கழிவுகளைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியாக பயனடைதல் ஆகிய தலைப்புகளில் வளவாளர்களால் சிறப்பு பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை!

## ஹிஸ்புல்லா எம்.பி. கோரிக்கை

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் மிக வேகமாக பரவி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதுவரையில் பலர் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். நோயாளிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று அச்சம் காணப்படுகிறது. இதனைக் கருதில் கொண்டு டெங்கு நுளம்பை ஒழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் பிரஸ்தாபித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மாவட்ட சுகாதார வைத்திய பணிப்பாளர் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வர் என்று தெரிவித்தனர்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME


everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA





# தேசிய ரீதியாக சாதிக்கக் காரணமான கல்முனை ஆசிரியர்கள் கௌரவிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

கடந்த 2023 ஆம் ஆண்டில் சாதாரணதர பரீட்சையில் அதி கூடிய பெறுபேறுகளைப் பெற்று கல்முனை கல்வி வலயம்தேசிய மட்டத்தில்அகில இலங்கை ரீதியில் 2 ஆவது இடத்தை பெற்றது.

இந்த உயர்வுக்கு காரணமாக அமைந்த ஆசிரியப் பெருந்தகைகளைப் பாராட்டி நற்சான்றுப் பத்திரங்களை வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றது.

மாணவர்களின் பல்லின கலை, கலாச்சார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பீ. காப்தீபன் கலந்து கொண்டார்.கல்முனை வலயம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளக் காரணமாக அமைந்த 500 இற்கும் அதிகமான ஆசிரியர்கள், அதிபர்கள், பாட இணைப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரும் நற்சான்று பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை வலயக் கல்வி அலுவலகப் பிரதிக் கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்வி பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாட இணைப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

(பழுவூரான்)

வாகரை – கண்டலடியில் சத்தியசாயி கிராமிய எழுச்சித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உதவும் கரங்கள் மற்றும் கல்லடி சத்தியசாயி நிலையத்தின் ஏற்பாட்டில் ஒரு வருடத்துக்கு உரிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

உதவும் கரங்கள் நிறுவனத் தலைவர் சதாசிவம் ஜெயராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு தேசியக்கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் ஓய்வு நிலை முகாமையாளர், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முயற்சி வெற்றி பெற....!

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட வரைவு குறித்து தமிழ்த்தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்குத் தாம் உத்தேசித்திருக்கின்றார் எனவும், எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிறிதரன் மற்றும் ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் தாம் கலந்துரையாடி அச்சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருக்கின்றார் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் முடிவுகளை அடுத்து எதிர்வருங்காலத்தில் அரசாங்கத்தினால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, குறைந்தபட்சம் அவ்விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியக்கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதனை முன்னிறுத்தி மேற்படி இருவரையும் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதன் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

தென்னிலங்கையில் வலுவான அரசு ஒன்று உருவாகி, அது தன்னிஷ்டப்படி புதிய அரசமைப்பை ஏற்படுத்தத் தயாராகி வரும் நிலையில், அவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயல்படுவது வரவேற்கத்தக்கது. கட்டாயமானது. அந்த வகையில் கஜேந்திரகுமாரின் முயற்சி நல்லதெனிலும் இது விவகாரத்தில் அவரின் நோக்கம் குறித்து பொதுவாகச் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

முன்னைய காலங்களில் மற்றையத் தமிழ்த் தேசியக் கட்சிகளை எல்லாம் புறமொதுக்கித் தனித்துச் செயற்பட ஒற்றை காலில் நின்றவர் அவர். மற்றக் கட்சிகள் எல்லாம் தவறிழைப்பவை என்ற மாதிரியும், தமது கட்சி மாத்திரமே சொக்கத்தங்கம் என்பது போலவும் செயற்பட்டவர் அவர்.

இப்போதும் கூட, தமிழர்களின் ஐக்கியம் என்பது எம்.பிக்கள் மட்டத்தில் மட்டும் வருவதாக இருப்பதில் பயனில்லை. அர்த்தமில்லை. அதனையும் தாண்டி, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிப்பு அதற்கு முக்கியம். குறிப்பாகத் தமிழரசுக் கட்சியை வேறாகவும், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை வேறாகவும் கையாள முயல்வது சரிப்பட்டு வராது.

ஆகவே புதிய அரசமைப்பு தொடர்பான சவால்களை தமிழ்த் தேசியத் தரப்புகள் ஒன்றித்து எதிர்கொள்ள வேண்டும் என்றால், அது வெறுமனே நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிப்பாக மட்டுமல்லாமல், அதனையும் தாண்டித் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒன்றிப்பாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் இது விடயத்தில் கஜேந்திரகுமாரனின் நிலைப்பாடு - மனவோட்டம் - உத்தேசம் - எண்ணம் - தந்திரோபாயம் - எல்லாம் யாது என்பதே கேள்வியாகும். அண்மையில் கூட தமிழரசு கட்சிக்கு இடையே இருக்கும் உட்கட்சிப் பிளவில், இடையில் புகுந்து அரசியல் லாபம் அடையும் கருத்தியலை அவர் வெளியிட்டமையைக் கண்டோம்.

அத்தகைய ஒருவருடன் - ஒரேயொரு எம்.பியை மட்டும் கொண்ட ஒரு கட்சியுடன் - தமிழரசுக் கட்சி ஒன்றித்துப் போவது என்பது பரஸ்பரம் சந்தேகத்திற்குரியதே.

தமிழர்களின் பிரதான கட்சியாக இருக்கும் தமிழரசுக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் நகாசு வேலைகளைச் செய்து கொண்டு, தமிழரசுக் கட்சியுடன் ஒன்றித்து செயல்பட எண்ணும் முயற்சி வெற்றி அளிப்பது சந்தேகத்திற்குரியது.

தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களை தனித்து கையாள முயலும் எத்தனத்துக்கு சில வேளைகளில் சில தமிழரசு எம்.பிக்கள் இணங்கிப் போனாலும், தமிழரசு கட்சி இணங்காது என்பது நிச்சயம்.

தமிழரசுடன் சேர்ந்து செயலாற்ற அவர் முன் வருவதே இன்றைய காலகட்டத்தில் அவரது அரசியல் நேர்மையாக இருக்க முடியும். ஐக்கியத்தின் பெயரால் தமிழரசின் ஒற்றுமையை பலவீனப்படுத்த எத்தனிக்கும் வெளிமுயற்சிகள் தமிழினத்துக்கே பாதிப்பாக முடியும்.



# பெருந்தோட்ட தொழிலாளர்களின் பணி வழிபாட்டுடன் நேற்று ஆரம்பம்

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)**

பிறந்திருக்கும் புதிய வருடத்தில் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் நேற்று (02) வியாழக்கிழமை தமது பணிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தனர்.

இதன் போது நாளாந்தம் தேயிலை கொழுந்து பறிக்கும் தேயிலை மரங்களுக்கு மஞ்சள் நீர் தெழித்து தேயிலை மரங்களுக்கு விசேட பூஜைகளையும் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் முன்னெடுத்தனர்.

அந்தவகையில் மடுல்சீம பெருந்தோட்ட தேயிலை பயிர்செய்கை நிறுவனத்துக்குச் சொந்தமான பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு மற்றும் எல்பட ஆகிய தோட்டப் பகுதியில் விஷேட பூஜைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது கெர்க்கஸ்வோல்ட் தோட்ட பொது முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டு தேயிலை கொழுந்து பறித்து பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

அத்தோடு இந்த முறை பதவி உயர்வு பெற்றுச் செல்லும் உதவி முகாமையாளருக்கு தோட்ட மக்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில்கள் வழங்கினர்.









# கல்முனை கடற்கரை பூங்காவின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை கடற்கரை பூங்கா மற்றும் அதனை அண்டிய கரையோர பிரதேசத்துக்கு பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா நேற்று வியாழக்கிழமை சென்றிருந்தார்.

அதிகாரிகளின் அசமந்த போக்கால் காலம் தாழ்த்தப்பட்ட கடற்கரை பூங்கா மற்றும் அதனை அண்டிய கரையோர அபிவிருத்திகளை பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பார்வையிட்டார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களால் முன்வைக்கப்பட்ட பல பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை வழங்கும் வகையில் உரிய அதிகாரிகளைக் குறித்த இடத்துக்கு வரவழைத்து உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் அந்தப் பகுதியில் இடம்பெறும் கடல் அரிப்பைத் தடுக்கும் வகையில் தடுப்புக்கற்கள் இடுவதற்கு உரிய வேலைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதன்போது கல்முனை பதில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரி.எம்.எம்.அன்சார், கல்முனை மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# வன்னியில் ஆசிரியர் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படுதல் வேண்டும்

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

## மூன்று மாதங்களில் தீர்வு என்கிறார் பிரதம செயலாளர்

(விஜயரத்தினம் சரவணன்)

வன்னிப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் மூன்று மாத காலத்தில் வடமாகாண பிரதம செயலாளரின் தலைமையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் பதிலளித்துள்ளார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (02) இடம்பெற்றது. குறித்த கூட்டத்திலேயே இவ்வாறு ஆசிரியர் வெற்றிடம் தொடர்பில் பேசப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும், மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் தரவுகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதன்போது கோரினார்.

சில மாவட்டங்களில் ஆசிரியர்கள், மேலதிகமாகவும், சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் வெற்றிடமாகவும் இருப்பதற்கான காரணம் என்ன? என்றும் இதன்பேது கேள்வி எழுப்பப்பட்டது. ஆசிரியர் நியமனங்களை சரியான முறையில் பகிர்ந்து இவற்றை சீர்செய்யவேண்டியவர்கள் இதுதொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலிருப்பது ஏன் என இதற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வே.ஆயகுலன் இதற்குப் பதிலளிக்கையில்,

புதிய ஆசிரியர் நியமனங்களை வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கே வழங்கி வருகின்றோம்.

எனினும் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் ஆசிரியர் நியமனங்களைப் பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் சேவைக் காலம் எட்டு வருடங்கள் முடிவுற்றவுடன், தமது இடங்களுக்கு இடமாற்றம் கோரியதாலேயே யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலதிகமான ஆசிரியர் தொகை அதிகமாகக் காணப்படுகின்றது.

இருப்பினும் அதை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மேலதிக ஆசிரியர்களை பெருமளவில் குறைத்து, ஏனைய இடங்களுக்கு ஆசிரியர் நியமனங்களை பகிர்ந்தளிக்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முழுமையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன என்றில்லை. இன்னும் இந்த ஆசிரியர் நியமனங்களை சீராக பகிரப்படவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

தற்போது புதிதாக ஆசிரிய இடமாற்றங்கள் கோரப்படுகின்றபோது, இடமாற்றம் கோருகின்ற குறித்த ஆசிரியருக்கான வெற்றிடம் மீள் நிரப்பப்படாமல், இடமாற்றங்களை மேற்கொள்ளக் கூடாது என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டிருக்கின்றார். இந்த உத்தரவை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.



அந்தவகையில் புதிதாக ஆசிரிய இடமாற்றங்கள் இடம்பெறும்போது, வன்னியில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு முன்னர், அந்த வெற்றிடத்துக்கு ஆசிரியர் யாழ்ப்பாணத்திலிருந்து நியமனம் பெற்று வருகை தந்த பின்னரே, வன்னியில் சேவையிலிருந்த ஆசிரியரை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இந்தப் பிரச்சினைகள் தற்போது குறைவடைந்து செல்கின்றன. இன்னும் சீராக்கவேண்டியுமிருப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது வன்னிப் பகுதிக்கு குறிப்பாக மிக முக்கியமான பாடங்களான கணிதப்பிரிவு, உயிரியல்பிரிவுகளுக்குக்கூட வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் கணிதப் பிரிவு ஆசிரியர்கள் 63 பேர் மேலதிகமாக உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மேலதிகமாகவுள்ள கணிதப் பிரிவைச் சேர்ந்த 63 ஆசிரியர்களையும், ஏனைய நான்கு மாவட்டங்களிலும் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நியமிக்காமைக்கான காரணம் என்ன? எனக் கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக முல்லைத்தீவில் கணிதப் பிரிவில் 25 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதேபோல் ஏனய மூன்று மாவட்டங்களிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே யாழ்ப்பாணத்தில் மேலதிகமாக இருக்கின்ற ஆசிரியர்களை, வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு வழங்கி சீர்செய்கின்ற நடவடிக்கைகளை மெற்கொள்ளுமாறும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

இதன்போது வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் திருமதி.எ.அன்ரன் யோகநாயகம் பதிலளிக்கையில்,

நாம் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கருத்தை ஏற்றுக் கொள்கின்றோம். மிக விரைவில் ஆசிரியர் சங்கங்களுடனும் கலந்துரையாடி, ஏற்கனவே நிபந்தனை அடிப்படையில் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பிலும் தீர்மானங்களை மேற்கொண்டு, பொதுவாக அனைத்து மாவட்டங்களும் பயன்பெறக் கூடிய வகையில் ஒரு இடமாற்றக்கொள்கையை வகுத்து அதற்கான அனுமதியைப் பெற்று அதை நடைமுறைப்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

வன்னியைச்சேர்ந்த அதிகளவான மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதையும், இது தொடர்பில் கூடுதலாக கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி மிகவிரைவில் இதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் ரவிகரன் எம்.பி. வலியுறுத்தினார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் சம்மாந்துறையில் இருவர் கைது!

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ் )

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் நேற்று வியாழக்கிழமை சம்மாந்துறை குழந்தையின் சந்தி என்னும் பிரதேசத்தில் வைத்து சம்மாந்துறை பெருங் குற்றப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பெருங்குற்றப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே ஐஸ் போதைப் பொருள்களை நீண்ட காலமாக சிறு பொதி செய்து வியாபாரம் செய்து வந்த சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்யப் பட்டுள்ளனர்.




சம்மாந்துறை கருவாட்டுக்கல் 01 பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், சம்மாந் துறை, உடங்கா 02 பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேக நபர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 2500 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், மற்றவரிடம் இருந்து 1700 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப் பட்டுள்ளன. சந்தேக நபர்கள், சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது நடவடிக்கையானது சம்மாந் துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் அநுர, சார்ஜன் அசோக்க, பொலிஸ் உத்தியோகத்தர்களான யேகான், நிரஞ்சன் ஆகியோரால் மேற்கோள்ளப்பட்டது.




# கிழக்கு காணி ஆணையாளராக வளர்மதி ரவீந்திரன் கடமையேற்பு!

(அபு அலா, கோபாலபுரம்
எஸ்.எம்.முபீன்)

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான திருமதி வளர்மதி ரவீந்திரன் கிழக்கு மாகாண காணி ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவால் நியமிக்கப்பட்டு புதன்கிழமை (01) கடமையைப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

அவரின் சேவைத்தரம், தகுதி மற்றும் அனுபவம் என்பவற்றின் அடிப் படையிலும் தலைமைத்துவ வழிகாட் டுதல்கள், நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டுத் திறமைகள் என்பவற்றை கருத்தில் கொண்டும் இந்த நியமனம் வழங்கப்பட்டது.



# கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்தாய்வு

(அபு அலா )

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (02) திருகோணமலை கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையடலில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷ்டம்.ஏ.எம். பைஷல், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, ஆளுநரின் செயலாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் ஆணையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், உள்ளூராட்சி மன்றங்களின் பற்றாக்குறை வருவாய் திட்டம், சிறு திட்டங்கள் மூலம் புதிய வருமானம் ஈட்டுதல், கழிவு முகாமைத்துவம், வாகன பராமரிப்பு, நிலம் தொடர்பான பிரச்சினைகள், நிலையான வைப்புச் சிக்கல்கள், சோலார் பொருத்துதல் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஆளுநரால் எடுத்துரைக்கப்பட்டது.





# தி.மு.க ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை: பழனிசாமி



தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"கடந்த வாரம் அண்ணா பல்கலைக்கழக மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கைது செய்யப்பட்டவர், தி.மு.க. நிர்வாகி. அவருடன் பேசிய 'அந்த சார் யார்?' என்பதை இதுவரை இந்த ஆட்சியாளர்கள் கண்டுபிடிக்கவில்லை. இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அனைவரையும் கைது செய்து சட்டப்படி தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்று அதிமுக சார்பில் மாநிலம் முழுவது கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டது. 'உண்மைக் குற்றவாளியை பிடித்து சட்டத்தின் முன்நிறுத்துவோம் என்று பாதிக்கப்பட்ட மாணவிக்கு உறுதி அளிக்காமல்' எங்களுக்கு பதில் அளிப்பதையே சில தி.மு.க. அமைச்சர்கள் கடமையாகக் கொண்டுள்ளனர்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்துக்கிடையே, இராமநாதபுரத்தில் தாழ்த்தப்பட்ட பெண் ஒருவர் கூட்டு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். மேலும், சென்னை, வில்லிவாக்கத்தில் 10 வயது சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டார் எனவும் ஓசூரில் 80 வயது மூதாட்டி துஷ்பிரயோகத்துக்கு உள்ளானார் என வெளிவரும் செய்திகள் அனைவரையும் மிகவும் கவலையில் ஆழ்த்தியுள்ளன.

தி.மு.க ஆட்சி இருக்கும் வரை பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இருக்காது. இந்த ஆட்சியாளர்களும், பொலிஸாரும் பாதுகாப்பு அளிப்பார்கள் என்ற நம்பிக்கையை தமிழக மக்கள் இழந்து விட்டார்கள். எனவே, பெண்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக்கொள்ள, வெளியில் செல்லும்போது தற்காப்புக்கான ஸ்பிரே, அலாரம் கருவி உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களை வைத்துக்கொள்ள வேண்டும். பெண்களுக்கு எதிராக இத்தனை கொடூரங்கள் நடைபெறுவதாக, தினமும் செய்திகள் வரும்போது, முதல்வர் ஸ்டாலின், மௌனமாக இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

`பெண்களுக்கு பாதுகாப்பு அரணாகத் திகழ்கிறோம்' என்று கூறும் அமைச்சர்கள், தமிழகத்தில் தினமும் நடைபெறும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களை சுட்டிக்காட்டும் எங்களுக்கு பதில் அளிப்பதை விட்டுவிட்டு, துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்."- என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானில் தண்டனை காலம் முடிந்த 183 இந்தியர்களை விடுவிக்க வலியுறுத்தல்



இந்தியா - பாகிஸ்தான் இடையே கைதிகளை பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தம் கடந்த 2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி ஜனவரி 1 மற்றும் ஜூலை 1 ஆகிய திகதிகளில் கைதிகள் பரிமாறிக் கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்திய சிறைகளில் தற்போது பாகிஸ்தானைச் சேர்ந்த 381 சிவில் கைதிகளும், 81 மீனவர்களும் உள்ளனர். அதேபோல் பாகிஸ்தானில் இந்திய சிவில் கைதிகள் 49 பேரும், 217 மீனவர்களும் உள்ளனர்.

இந்நிலையில் பாகிஸ்தானில் தண்டனை காலம் நிறைவடைந்த இந்திய மீனவர்கள் மற்றும் சிவில் கைதிகள் 183 பேரை விரைவில் இந்தியா அனுப்பும்படி பாகிஸ்தானிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

மேலும் பாகிஸ்தான் சிறையில் உள்ள இந்திய சிவில் கைதிகள் மற்றும் மீனவர்கள் 18 பேருக்கு உடனடியாக இந்திய தூதரக உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாகிஸ்தானிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்திய சிறைக் கைதிகளின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்யும்படியும் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய சிறைகளில் உள்ள பாகிஸ்தான் கைதிகள் என நம்பப்படும் 76 பேரின் குடியுரிமையை விரைவில் சரிபார்த்து தகவல் தெரிவிக்கும்படியும் இந்தியா சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் இந்தியா மேற்கொண்ட முயற்சிகளால், 2,639 இந்திய மீனவர்கள் மற்றும் சிவில் கைதிகள் பாகிஸ்தானிலிருந்து தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர். கடந்தாண்டில் மட்டும் 478 இந்திய மீனவர்கள் மற்றும் 13 இந்திய சிவில் கைதிகள் பாகிஸ்தானில் இருந்து தாயகம் திரும்பியுள்ளனர்.

# பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்காலத்தி வேலைவாய்ப்பு 64 கோடியாக அதிகரிப்பு

பிரதமர் மோடி ஆட்சிக்காலத்தில் நாட்டில் வேலைவாய்ப்பு 64.33 கோடியாக அதிகரித்துள்ளது என்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவிக்கையில்,

"நாட்டில் கடந்த 2014 - 2015 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு 47.15 கோடியாக இருந்தது. இதைத் தொடர்ந்து பிரதமர் மோடி தலைமையில் ஆட்சி அமைந்த பின்னர் வேலைவாய்ப்பு சதவீதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தார்.

அதன்படி தற்போது 2023 - 2024 இல் வேலைவாய்ப்பு சதவீதம் 36 சதவீதம் அதிகரித்து 64.33 கோடியாக அதிகரித்துள்ளது. இதன்மூலம் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் வேலைவாய்ப்புகள் அதிகம் உருவாக்கப்பட்டுள்ளது கண்கூடாக உள்ளது."- என்றார்.






# தென்கொரிய முன்னாள் ஜனாதிபதியை கைது செய்வதற்கு நடவடிக்கை

தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் யோலை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக பொலிஸார் அவரது இல்லத்திற்குப் பிரவேசித்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடுமையான இராணுவ சட்டத்தினை அமுல்படுத்தியதை அடுத்து தென்கொரியாவின் ஜனாதிபதி பதவியிலிருந்து யூன் சுக் யோல் நீக்கப்பட்டார்.



இதனைத் தொடர்ந்து யூன் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததற்காகவும், கிளர்ச்சியைத் தூண்டியதற்காகவும் விசாரணை அதிகாரிகள் முன் பிரசன்னமாகுமாறு அவருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்க மறுத்ததை அடுத்து, நீதிமன்றம் இந்த வாரம் முற்பகுதியில் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தது.

இதற்கமைய யூன் சுக் யோலை கைது செய்வதற்காக அந்த நாட்டு நேரப்படி இன்று காலை 8 மணியளவில் பொலிஸ் அதிகாரிகள் அவரது இல்லத்திற்குப் பிரவேசித்தனர் என குறிப்பிடப்படுகிறது.

இந்தநிலையில் யூன் கைது செய்யப்படுவதனை தடுக்கும் முயற்சியில் அவரது ஆதரவாளர்கள் ஈடுபட்டமையால் இந்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்: காசாவில் 10 பேர் உயிரிழப்பு

காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் மூன்று குழந்தைகள் உட்பட 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ்-இஸ்ரேல் இடையிலான போரில் காசாவில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆனால் இன்னும் போரின் தாக்கம் குறையவில்லை. இதனால் பலர் தெற்கு காசாவில் உள்ள பாதுகாப்பான பகுதி என அறிவிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

இந்நிலையில், நேற்று மக்கள் தங்கியிருந்த தற்காலிக கூடாரங்கள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. அதில், மூன்று குழந்தைகள் உட்பட 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர்களில் காசா பொலிஸின் பொது இயக்குநரான மேஜர் ஜெனரல் மஹ்மூத் சாலா மற்றும் அவரது துணைத் தளபதி பிரிக் ஜெனரல் ஹோசம் ஷவான் ஆகியோர் அடங்குவர்.

தற்போதுவரை பலியானோரில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் கடும் குளிரில் கூடாரங்களில் தங்கியுள்ளனர் என குறிப்பிடத்தக்கது.




பக்கங்கள் 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 03/01/2025

**அமெரிக்காவில் இடம் பெற்ற விபத்தில் கனடியர் உயிரிழப்பு**

அமெரிக்காவில் இடம்பெற்ற விபத்து சம்பவம் ஒன்றில் கனடிய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் உட்டாஹ் மாநிலத்தில் பணிப்பாறை சரிவில் சிக்கிய கனடிய

02



# ரொறன்ரோவில் புத்தாண்டில் பிறந்த குழந்தைகள்

**கனடாவின் டொரன்டோவில் புத்தாண்டு மலர்ந்ததும் பிறந்த குழந்தைகள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**2025 ஆம் ஆண்டு மலர்ந்து சில நொடிகளில் மிசிசாகா வைத்தியசாலையில் குழந்தை பிரசவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.**

**சாம்ப்ரியின் என்ற பெண் உசாவியா என்ற மகனை ஈன்றெடுத்துள்ளார். தாயும் சேயும் நலமாக உள்ளனர் என ட்ரில்லியன் மருத்துவமனை தெரிவித்துள்ளது.**

தந்தை முகமடுடன் மூவரும் புகைப்படம் ஒன்றையும் எடுத்துக் கொண்டு வெளியிட்டுள்ளனர். புத்தாண்டு மலர்ந்து சில நிமிடங்களில் டொரன்டோவில் ஹார்பர் என்ற குழந்தை பிறந்துள்ளது.

கிறிஸ் மற்றும் மச்செலா தம்பதியினரின் இந்த குழந்தை 7 பவுண்டு எடை கொண்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோவின் நியூ மார்க்கெட் பகுதியில் சவுத் லேக் மருத்துவமனையில் நள்ளிரவு 12. 55 மணிக்கு மற்றும் ஒரு குழந்தை பிறந்துள்ளது.

இந்த குழந்தைக்கு ஜாமீன் லைன் என பெயரிடப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெத்ரா கோவிந்தராசு - ரத்னகிரி ஆதியண்ணன் ஆகிய தம்பதிகளுக்கு ஆசுவா மருத்துவமனையில் அதிகாலை 1.56 மணிக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. டர்ஹம் பிராந்தியத்தில் பிறந்த முதல் குழந்தை இது என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகாலை 2.45 மணிக்கு வோகன் வைத்தியசாலையில் விஜயவார் மற்றும் டிரான்பிரிட் ஆகிய தம்பதியினருக்கு குழந்தை பிறந்துள்ளது. பிரம்டனில் காலை 6.00 மணியளவில் ஹாவா சின்யன் மற்றும் அமாடு சானாஹ் ஆகியோருக்கு குழந்தை பிறந்துள்ளது.

# கனடாவில் 10 வீதமானவர்கள் வரி கோப்புகளை பதிவு செய்வதில்லை

கனடாவில் சுமார் 10 வீதமானவர்கள் வரி கோப்புகளை பதிவு செய்வதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சிலர் பல ஆண்டுகளாகவே வரி கோப்புகளை உரிய முறையில் பதிவு செய்வதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால், அரசாங்கத்திற்கு அவர்கள் பெருந்தொகை பணத்தை செலுத்த வேண்டி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வரிகோப்புகளை முறையாக பதிவு செய்ய தவறுவோர் அரசாங்கத்தின் நலன்புரி திட்டங்களை பெற்றுக் கொள்ளவும் தகுதி அற்றவராகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, உரிய நேரத்தில் வரி கோப்புகளை பதிவு செய்வது மிகவும் அத்தியாவசியமானது என தெரிவிக்கப்படுகிறது.






# இந்த ஆண்டு முதல் கனடாவின் புலம்பெயர் விதிகளில் மாற்றம்

2025 ஆம் ஆண்டின் துவக்கத்தில், பல்வேறு நாடுகள் தங்கள் சட்டங்களில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன.

கனடாவிலும் சட்டங்களில் பல மாற்றங்கள் நடைமுறைக்கு வருகின்றன.

அவ்வகையில், புலம்பெயர்தல் தொடர்பிலும் சில மாற்றங்கள் அறிமுகமாகின்றன.

கனடாவின் பெடரல் அரசு, 2025ஆம் ஆண்டு முதல் நிரந்தர குடியிருப்பு அனுமதி இலக்குகளை குறைக்க முடிவு செய்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் மட்டும், மொத்தம் 105,000 சேர்க்கைகள் குறைக்கப்படும் என கனடா அரசு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையில், தற்காலிக குடியிருப்பு அனுமதி பெற்றோருக்கான இலக்குகளும் அடங்கும்.

அத்துடன், சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி அனுமதிகளும் 2024 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டில் 10 சதவீதம் குறைக்கப்பட உள்ளது.

வீட்டு வசதியை மேம்படுத்துவதற்காகவும், வேலையின்மை விகிதத்தை குறைப்பதற்காகவும், பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கனடா அரசு தெரிவித்துள்ளது.




## அமெரிக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

38 வயதான டேவிட் ஐதர் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்காத காரணத்தினால் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

கடுமையான பனிப்பொழிவு காரணமாக தேடுதல் பணிகள் கால தாமதமாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அந்த நபர் பனிப்பாறை சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நபர் கியூபிக் மாகாணத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவிற்குள் பிரவேசிக்கும் குடியேறிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தீர்மானம்

இந்த ஆண்டில் கனடாவிற்குள் பிரவேசிக்கும் குடியேறிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் சில ஆண்டுகளுக்கு இவ்வாறு நிரந்தர வதிவிட உரிமையாளர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இந்த ஆண்டில் ஒட்டு மொத்தமாக ஒரு லட்சத்து ஐந்தாயிரம் குடியேறிகளுக்கு மட்டும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கனடாவில் வாசித்து வருபவர்கள் நிரந்தர வதிவிட உரிமை கோரும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

முதல் தடவையாக இந்த ஆண்டு தற்காலிகமாக வதிவோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.

எவ்வாறு எனினும் வழமையாக நாட்டுக்குள் உள்வாங்கப்படும் குடியேறிகளின் எண்ணிக்கையில் இருந்து கணிசமான அளவு தொகை குறைவடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் சர்வதேச மாணவர்களுக்கான அனுமதியும் 10 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் பறவை காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட சிறுமி குணமடைந்தார்

கனடாவில் பறவை காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுமி குணமடைந்து வருகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிறுமிக்கு பொருத்தப்பட்டிருந்த செயற்கை சுவாசக் கருவி அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நோய் தொற்று தாக்கம் குணமாகி உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

13 வயதான சிறுமி ஒருவரே இவ்வாறு பறவைக்காச்சல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இருமல், வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய்க் குறிகளினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த சிறுமிக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் பறவை காய்ச்சல் நோய் பரவியிருந்தமை தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து மேற்படி சிறுமிக்கு நோய் தொற்றுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது இந்த சிறுமியின் உடல் தேறி வருகின்றார் எனவும் நோய்த்தொற்று நீங்கி உள்ளது என்றும் மருத்துவமனை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.




